ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

वटुर्वा गेही वा यतिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद्भवतु भव किं तेन भवति ।
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीयस्त्वं शंभो भवसि भवभारं च वहसि ॥

ஒருவன் பிர்மசர்யா சிரமத்திலோ, கிருகஸ்தாசிரமத்திலோ, அல்லது, ஸந்நியாஸா சிரமத்திலோ, ஜடையைத் தரித்துக் கொண்டோ, ஒன்றுமில்லாமல் ஸாமான்ய மனிதனாகவோ இருக்கட்டும், ஹே! பரமேசுவர! இவைகளால் மாத்திரம் யாதொருபயனுமில்லை. உம்முடைய அனுக்கிரகத்தைப் பெறவும் முடியாது. பின்னே, ஹே பசுபதே! ஸகலப் பிராணிகளுக்கும் பதியாய்விளங்கும் மஹேசுவர! எவனுடைய ஹிருதயமாகிற தாமரைமலரானது உமக்கு அதீனமாக அர்ப்பணம் செய்யப்படுகின்றதோ, ஹே சம்போ! சுகத்திற்குக் காரணமான ஈச! அந்த மஹானுக்குநீர் பிரியராகிறீர்; அவனுக்கேற்படும் ஸம்ஸாரபாரத்தையும்நீரே வகிக்கிறீர்.

இதினால் மானிடப்பிறவியை யடைந்தவர்களுக்கு எப்பொழுதும் ஈசுவர பக்திசெய்து அதினால் ஜந்மஸாபல்யத்தைப் பெறவேண்டும். அஃதின்றி ஜாதியிலும் ஆசிரமத்திலும் சிறந்தவனென்று பெருமை பேசுவதால் பயனொன்றுமில்லை என்று அறிவிக்கிறார். எந்த ஜாதியில் எந்த ஆசிரமத்திலிருந்தாலும்எவனொருவன் தன் சித்தத்தைப் பகவதர்ப்பணம் செய்கின்றானோ, அவனுக்கு தர்ம்மார்த்தகாம மோக்ஷமென்கிற நான்குவித புருஷார்த்தங்களையும் பகவான் கொடுத்து, ஸம்ஸாரரோகத்தையும் அடியோடு போக்கடிக்கிறார். ஆகையால் எவரும் ஈசுவர பக்தியைக் கைவிடக்கூடாது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

தீர்த்ததானம் மிகச் சிறந்தது.

(20-வது பக்கத்தொடர்ச்சி)

ஹே! மஹாராஜரான யுதிஷ்டிரரே! முன் ஒரு ஸமயத்தில் இந்திரியங்களைத் தனக்கு வசமாகக் கொண்டவனும், ஆசையற்றவனும், சுத்தஸ்வபாவத்தை யுடையவனும், வேதம், வேதாந்தம், தர்மசாஸ்திரம் முதலானவைகளில் பயிற்சிபெற்றவனும், என்னுடைய பக்தர்களுள் சிறந்தவனுமான ஓர் அந்தணசிகாமணி இருந்தான். அவன் எப்பொழுதும் ஸகலப் பிராணிகளுக்கும் ஹிதமாயிருந்துகொண்டு, உஞ்சவிர்த்தி எடுத்து, மௌனியாயிருந்து, அதிதிகளை ஆராதித்துவந்தான். சாஸ்திரங்களில் கூறப்பட்டபலதானங்களுக்குள் சிரேஷ்டமானதீர்த்ததானத்தைச்செய்யவேண்டுமென்று மிகவும் சிரத்தையுடையவனாக மானிடர், பசு, பக்ஷி, மிருகம் முதலான ஸகலப்ராணிகளுக்கும் மிகவும் ஆதரவுடன் சீதளமான தீர்த்தத்தைக் கொடுத்து பதரிகாச்ரமத்தில் வசித்து வந்தான். இவ்விதம் சிலகாலம் செல்லவே அன்புடன் அளிக்கப்படும் தீர்த்ததானத்தால் உலகில் அவனுக்குவிசேஷமான கீர்த்தி எற்பட்டுவிட்டது. அவனிருக்கும் ஆச்ரமத்தில் யக்ஷர்கள், ஸித்தர்கள், சாரணர்கள் முதலான பல தேவகணங்களும் எப்பொழுதும் உல்லாஸமாய் கிரீடித்துக் கொண்டிருப்பார்கள். இவ்விதம் அந்தப் பிராமணருக்கு தானத்திலிருக்கும்சிரத்தையை பரீக்ஷை செய்யவேண்டி ஸந்தேகங்கொண்டு இந்திரன் அக்னியுடன்கூட வேதியர் வேடம்பூண்டு அந்த ஆச்ரமத்திற்குச்சென்று தாகவிடாயால் வருந்துகிறவன்போல் அடியில் வருமாறு யாசித்தான்.

ஹே பிராமணரே! ஸஹிக்கமுடியாத சூரியனுடைய கிரணங்களால் மிகவும் தாபத்தையடைந்தவர்களாகிய நாங்களிருவரும் தீர்த்தத்தை அருந்தவேண்டி இங்கு வந்தோம். சீக்கிரம் குளிர்ந்த தீர்த்தத்தைக் கொடும்" என்றான்.

இம்மொழியைச் செவியுற்ற சுசீலனெனப் பெயர்வாய்ந்த அவ்வேதியன் அவ்விருவர்களையும் நோக்கி "ஹே பாக்கியசாலிகளான மஹான்களே? உங்களால் நான்கிருதார்த்தனானேன். ஸம்ஸாரஸாகரத்திலிருந்தும் கரையேற்றப்பட்டேன், இப்பொழுது தான் எனது ஜன்மாவும் ஜீவனும் ஸபலமாயிற்று, எங்கள் வம்சத்திலுதித்தபெரியோர் களனைவரும் இப்பொழுதுதான் முக்திபெற்றார்கள். இது உண்மையே" என்றிவ்விதம்கூறி அதிக ஸந்தோஷத்தையடைந்த அந்தப்பிராமணன் விப்ரவேஷத்துடன் அங்கு தோன்றியிருக்கும் அவ்விருவர்களின் பாதங்களைச் சுத்திசெய்து, பிறகு மூவுலகையும் படைத்தாளும் சக்திவாய்ந்தவிஷ்ணுவானவர் ஸந்தோஷத்தையடையட்டும்" என்று பகவானைத்தியானித்து அவர்களுக்குத் தீர்த்தம் கொடுத்தார்.

அக்னியுடன் கூடிய இந்திரன் அங்கு தீர்த்தசாலையிலிருக்கும் ஜலத்தைப் பூராவும் அருந்தியும் தாகவிடாய் தீராமல், மறுபடியும் சீக்கிரமாய் தீர்த்தம் வேண்டுமென்று அந்த சுசீலரிடம் யாசித்தார். அந்த வசனத்தைக்கேட்ட வேதியரும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைத் தியானித்து பானீயசாலையில் உட்சென்று அங்கிருக்கும் தீர்த்த கடங்கள்யாவும் தீர்த்தமில்லாமல் சூன்யமாயிருப்பதைப் பார்தது மிகவும் கவலைகொண்டு ஸ்ரீமந் நாராயணனை நமஸ்கரித்துப் போற்றத் துடங்கினர். ஹே ஜகன்னாத! பிராம்மணோத்தமர்கள் அதிக தாகத்தால் தீர்த்தமருந்தவேண்டி இவ்விடம் வந்திருக்கும் ஸமயத்தில் இந்த தீர்த்தசாலையில் என்னால் வைக்கப்பட்ட கடங்களில் ஒன்றிலாகிலும் ஜலமில்லை. தேவதேவரான ஹே பிரபுவே! என்னால் இதுவரை யாதொரு இடையூறுமின்றி அனுஷ்டித்துவரப்படும் தர்மத்திற்குத் தற்காலம் ஏற்பட்ட விக்னத்தை நிவர்த்திசெய்து பூர்த்தியடையும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். தங்களுடைய வேலைக்காரனை என்னுடைய ஸங்கற்பத்திற்கு பங்கம் செய்யலாமா? எனக்கு பிதாவா

யும், மாதாவாயும், குருவாயும், பந்துவாயும் இருப்பவர் நீரே. உமது தியானமே எனக்குச் சிறந்ததவம். கருணைக்கடலான ஹே ஜகத்பதே! உம்மையும் பொருட்டு வந்தனம். எனது விருதத்தை ஸபலமாகச் செய்ய வேண்டுகிறேன் என்று பலவாறாய்ப் பிரார்த்தித்தான். ஸ்ரீ வைகுண்டவாஸியும் தன்பக்தனைப் பாதுகாக்க வேண்டி உடனே அங்குள்ள தீர்த்தகடங்களை ஜலத்தால் பூர்த்திசெய்து விட்டார். ஸுசிலனென்கிற அந்தணரும் அதையறிந்து அளவிலாவாநந்தமடைந்து அங்குவந்திருப்பவர்களுக்கு வேண்டியவரைதீர்த்தம்கொடுத்து திருப்திசெய்தார் (தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

இந்துதேவஸ்தானமசோதா.

ஆரியவம்சத்திலுதித்த ஆஸ்திக இந்தியர்களே! இங்குயான் வெளியிட ஆரம்பித்துத் தலையங்கம் கொடுத்தாரம்பிக்கும் விஷயம் இன்னதென்பது இப்போது நம்ராஜதானிமுழுமையும் கொந்தளிப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறதாயினும் மறுபடியும் கதறுவதில் பலனுண்டென்றே இங்கிறங்குகின்றேன். சென்ற வருடத்தில் நமது சென்னையில் ஓர் மந்திரி தலையங்கத்தில் கூறிய மசோதாவைச் சட்டமாக்கவேண்டி பரமகருணையுடன் மேன்மைதங்கிய கவர்னரது முன்னிலையிற் கொண்டுவந்தார். அப்போதே அச்சட்டம் நமது இந்துமதத்திற்குப் பெருத்த இடியென்று சட்டசபை மெம்பர்கள் நடுநடுங்கி இதைச் சட்டம் செய்வது சற்றும் நாகரீகத்துக் கொவ்வாதென்றும், மகாராணியாரவர்களது வாக்குறுதியான ஆக்ஞைக்கு நேர்விரோதமென்றும், அவ்வாக்குறுதியான பாட்டியாரின் ஆக்ஞையை நானும் நிறைவேற்றி ஆட்சிபுரிவேனென்று வாக்களித்து இந்தியா சக்கரவர்த்திப் பட்டம்பெற்று விளங்கிவரும் நமது மன்னர் பிரானின் மகிமைக்கும் தகுதியல்லவென்றும் பற்பலவாறு நீதிகளை எடுத்துக்காட்டி வாதாடியும் அக்காலத்தில் கவர்னரவர்கள் மெம்பர்களது வார்த்தையைச் சற்றும்மதியாது ஏதோஅற்பகாரணத்தை

மனதில்வைத்துக் கொண்டு அம்மசோதா கொண்டுவந்த மந்திரியின் சூழ்ச்சியிலகப்பட்டு உலகத்திலுள்ள இந்திய ஜனங்களின் அபிப்பிராயத்தை முற்றும்மதியாமலே சட்டமாக்கினர். பிறகு மேன்மைதங்கிய கவர்னர்ஜனரலின் அனுமதி பெறுவதற்காக அனுப்பப்பட்டிருந்தது. அங்கு அவர் கையெழுத்திட்டுச் சட்டமாக்கக் கூடாதென்று பற்பல விடங்களிலும் இந்துக்கள் பெறுங் கூட்டமிட்டுக் கூச்சலிட்டனர். செல்வாக்குள்ள கனவான்களும் அநேகர் கூட்டமாய் லார்டுரீடிங்பிரபுவைக்கண்டு நமது குறையைத் தெரியப்படுத்தி அதை நிராகரிக்கும்படி வேண்டிக் கொள்வோமென்றும் போய்பேட்டிகண்டு தெரியப்படுத்தியும் கொண்டார்கள். அதற்கு வைஸ்ராய் இவ்விஷயத்தை யோசித்துமுடிவு செய்கிறேனென்று கூறிவிட்டனர். அதுமுதல் யாவரும் சிறிது காலமட்டும் வைஸ்ராய் அவர்கள் இம்மசோதாவைச் சட்டமாக்க அனுமதிக்கமாட்டார்கள்; ஏனெனில் அவர்மிகச் சட்டநிபுணர். இதுவோ சட்டத்திற்கும் ஜனங்களது முக்கிய ஜீவாதாரத்திற்கும் கொடிய விரோதமானது ஆகவே நிராகரித்து விடுவாரென்றே திண்ணமாய் நம்பினர். இப்போது நமது எண்ணத்திற்கு நேர் விரோதமாய் முடிந்திருக்கிறது. சட்டத்தில் மிகத்தேற்சியும் அனுபவமும் வாய்ந்தவைஸ்ராய் அவர்களே இவ்விதம் செய்துவிட்டார்களே என்று நாம் ஆச்சரியப்படவோ துக்கப்படவோ இரண்டிற்கும் தகுதியுள்ளவர்களல்ல. இருக்கட்டும். இதைப் பற்றிப் பரிதபிக்க நமக்கு இனி அவகாசம் கிடையாது. வீடுதீ பற்றி எரியும்போது எவ்விதம் தீபற்றியது என்று விசாரிக்கப் புகுவதுபோலாகும்- இம்மசோதா சட்டமாகலாம் என்று இப்போது ஆய்விட்டது. இனி இச்சட்டத்தால் நமக்குக்கிடைக்கக் கூடியபலன் இதுவே, இனி வரவர தேவஸ்தானத்தின் உத்ஸவங்கள் குறையும். தர்மசத்திரங்கள் குன்றும் ஆஸ்திகனான இந்துவுக்குக் கோயிலில்நுழைந்து ஸ்வாமிதரிசனம் செய்யப்போனால் அவன்மனம் புண்ணாகும், இவைகளை விவரிக்கப்பெறுகுமென்று. மேற்சொல்வோம். இம்மட்டா. நமது பாமாசார்யர்களாய் பீடாதிபதிகளாய் விளங்கிக்கொண்டு உலகத்தில் ஆங்காங்கு ஸஞ்சாரம் செய்துகொண்டு பாமரர்களாய் நாஸ்திக்கியத்தோடு திரிபவர்களையும் பாமஆஸ்திக சிகாமணிகளாய் மாற்றி ஜயத்துடன்

பிரகாசித்து லோகாசார்யர் ஜகத்குருவென்று புகழ்பெற்றிருக்கும் குருசிகாமணிகளும் கீழ்நின்று உபதேசம்கேட்கவும் உபதேசத்தைச் செய்யவும் ஓர் குருவாய் ஓர் அநாசாரம் நிறைந்தவன் வருவான் நிச்சயம்தான் என்று இம்மசோதா கூறுகின்றது. சிவ சிவ. என்ன அனியாயம் நமது இந்துமதம் இவ்வளவு கீழ்நிலைக்கு இப்போதே வந்துவிட்டதா? இந்து மதாபிமானச் சிங்கம் ஒன்றுமா இவ்வுலகிலில்லை? நாம் அவ்வளவு அனாதைகளாய்ப் போய் விட்டோமா? தர்மத்திற்கு வாடுதல்வரும்போது நான் வருவேனென்று பகவான் சொன்னது பொய்யாய்ப்போகுமா? ஈசனின் வாக்கு ஒருபோதும் பொய்யாகாது **भयकृद्भयनाशन:** "பயத்தைக் கொடுப்பார். அதைநாசம் செய்வார்" என்றும் சொல்வதுண்டு. ஆகவேவெறும் தூக்கம் தூங்கிக்கொண்டு பித்தன்போல் லோக முன்னேற்ற மென்றும் சகோதரத்வமென்றும் சமத்துவமென்றும் பலவாறு பிதற்றிக்கொண்டு புலம்பித் தவிக்கும் நம்மைத் தட்டி எழுப்பி சுகவழியில் விழித்துக்கொண்டு நடத்துவதற்காக பகவானே இந்தக் கொறடாவை நம்முதுகில் இப்போது பலமாய்ச் சாற்றிவிட்டாரென்பது வாஸ்தவம் ஆகவே இவ்விஷயத்தைப் பற்றிப் பூரணமாய் ஒவ்வொரு இந்துவும் விழித்துக்கொண்டு அடிஉறைத்து விட்டதைகவனித்துத் தக்கபரிகாரத்தைத் தேடமுன்வர வேண்டும். இவ்விஷயத்தைப் பற்றி 19-1-25 திங்கட்கிழமை சுதேசமித்திரனில் 7-வதுபக்கம்வெளிப்பட்டிருக்கும் நமது மதச்சிங்கங்களின் கர்ஜனையை நன்கு பாருங்கள்! அதிற் கூறியபடி தர்மரக்ஷணஸபை ஸ்தாபிக்கவேண்டும். இதற்குமுன் வெகுகாலமாய் தர்மரக்ஷணஸபை யென்றொன்றுண்டு. அச்சபை இப்போது இவ்விஷயத்தில் என்னசெய்கிறதோ தெரியவில்லை. பரமஆபத்தாயும் இந்து மதத்திற்குத்தாய்வேரை அடியோடு களையக் கூடியதுமான இந்த மசோதாவை எதிர்க்காமலிருந்து அது எந்ததர்மத்தை ரக்ஷிக்கவந்தஸபையோ! இனி இந்துமகாஸபையென்று ஆடம்பரப்பெயரோடு தலைதூக்கி ஆடுகிறதே. அச்சபையின் நோக்கம் இவ்விஷயத்தில்யாதோ? இம்மசோதாவை இப்போது இஷ்டப்படி கூத்தாடவிட்டு விட்டால் இந்து மதத்தின் தலையிலேயே ஆடிமதத்தையே அழித்து விடுமென்பது திண்ணம்.

ஆகையால் ஆஸ்திகர்கள் யாவரும் இவ்விஷயத்தில்தான் ஒன்று கூடவேண்டும். இதுவிஷயமாய் ஆங்காங்கு கிராமந்தோறும் சென்று ஸாமான்ய ஜனங்களுக்கும் இந்த அனர்த்தத்தை விவரித்துரைத்து யாவரிடமும் கையெழுத்துவாங்கி மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்திப் பெருமானுக்கு நமது குறைகளைத் தெரியப்படுத்திப்பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும். வீட்டிற்குள்ளிருக்கும் மூடசகோதரர்கள் சச்சரவுசெய்து கொண்டு இருவருக்கும் ஸொத்து வேண்டாமென்று தெருவில் சூறையிடுவதுபோல் அற்பமான மனஸ்தாபத்தை முன்னிட்டு நமதுமுன்னோர்கள் திரட்டி வைத்திருக்கும் என்றும் அழியாத ஆஸ்திக்கியமென்னும் ரத்தினக்களஞ்சியத்தை அள்ளியெறிய வேண்டாம். மதம்காப்பாற்றப் பட்டால்தான் நாம்க்ஷேமமாய் வாழலாம் அப்போதுதான் ஈசன் நமக்கு அருள்புரிவார். அப்போதுதான் நாம்நினைத்ததெல்லாம் கைகூடும். எந்த தேசத்திலும் எக்காலத்திலும் மதம் முன்னேற்றத்தால் தேசமுன்னேற்ற முண்டென்பது அனுபவ சித்தம். மதமென்பதும் நமது மனத்திற்குப் பிடித்ததுதானென்பதுமில்லை. அதை வேதம்தான் கூறும், அதைநாம் மாற்றமுடியாதென்பதும் மற்ற மதஸ்தர்களும் உறுதியாய் நம்புகின்றனர். ஆகவே ஆஸ்திகர்களான நாமெல்லோரும் ஜனங்களின் அபிப்பிராயத்தையும் அவர்களிட்ட கூக்குரலையும் சற்றும் கவனியாமல் அவஸரமாய்ச் சட்டமாக்கிய இம்மசோதாவை எதிர்த்து அடிக்கவும் அவ்விதம் முடியாமற்போயினும் இவ்விஷயத்தில்தான்நாம் ஸத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று எண்ணினால் நமது லக்ஷ்யம் சீக்கிரம் கைகூடும். இதற்காக ஏற்படப்போகும்திட்டங்களை அப்போதப்போது யாவரும் அனுஸரிக்கவேண்டும், இனி இவ்விசேஷங்களை நமது ஆர்யதர்மமே உபதேசிக்கும்.

சுபம்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

ஆசாரம்.

(32-வது பக்கத்தொடர்ச்சி)

அதையே பெரியோர்களும். (ஆ) आचारः प्रथमो धर्मः என்று, ஆசாரமே முதல்தர்மம் என்றுகூறியுள்ளார். அந்த ஸதாசாரத்தைப்பற்றி கொஞ்சம் விவரிப்போம். அதாவது

(सतां+आचारः-आङ्पूर्वात् चरेर्भावे घञ्प्रत्यये आचारपदसिद्धिः)

சாதுக்களின்ஆசரணம் அவர்கள்நான்கு வர்ணங்களுள் மேலான பதவியை யடைந்தவர்களாயும், மிகுந்த பிரயோஜனத்தோடு கூடிய யாகங்களில் அதிகாரமுள்ளவர்களாயும் முறையே வேத வேதாங்கங்களைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும். அதிகாரமுள்ள வர்களாயும் இருப்பவர்கள் பிராமணரே. அவர்கள் வேதாப்பியாஸம் செய்தபிறகு முறையே கூறியகர்மாக்களைக் கைவிடாமல் அனுஷ்டித்துவருவதால் அவர்களையே சாதுக்களென்று சான்ருேர் சாற்றுகின்றனர். அவர்களின் அனுஷ்டானமாவது:—

साधवः क्षीणदोषाश्च सच्छब्दस्साधुवाचकः ।
तेषां आचरणं यत्तु सदाचारस्स उच्यते ॥

ஸத்என்ற சப்தமானது ஸாதுவாசகம் ஸாதுஎன்ற சப்தத்திற்கு போக்கடிக்கப்பட்ட தோஷங்களை யுடையவர்கள் என்று, பொருள். அவர்களுடைய ஆசரணத்தை ஸாதாசாரமென்று கூறுகிருர்கள்:—

आचारः प्रथमो धर्मःश्रुत्युक्तस्मार्त एव च ।
तस्मादस्मिन्समायुक्तो नित्यं स्यादात्मवान्द्विजः॥ (அ-1. சு-105)

ச்ருதியிலும் ஸ்மிருதியிலும் கூறப்பட்ட ஆசாரமே முதல் தர்மம் ஆகையால் இவைகளில் கூறியவாறு சிறந்த ஆசாரத்துடனிருக்கும். த்விஜன் ஆத்மஞானம்பெற அருகனுகிருன். என்று மனு செப்புகின்ருர். (வ்யாஸமகரிஷியும்)

आचारमेव मन्यन्ते गरीयो धर्मलक्षणम् ।

ஆசாரமே பெரியதர்மமென்று தெரிவிக்கிறார். ஸாதுக்களின் ஆசாரங்கள், ச்ருதி ஸ்மிருதிகளை விட்டுக் கொஞ்சம்கூட நழுவாது இருக்குமாதலின் அந்த அனுஷ்டானத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொள்கிறார்கள். சிலருக்கு இவ்விடத்தில் ஓர் சங்கை உண்டாகலாம், அஃது ஆசாரம் எப்படி பிரமாணமாகுமென்பது? ஆசாரமாவது ச்ருதிஸ்மிருதிகளின்மூலமாக ப்ரமாணமாகஆகிறது 'சில இடங்களில் ஆசாரம் மட்டுமிருக்கிறது. ச்ருதிஸ்மிருதிகளில்லை' என்றால் அவிடம்ச்ருதி ஸ்மிருதிகளை கற்பிக்கலாம். ச்ருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமான ஆசாரங்களை ஒருபோதிலு மனுஷ்டிக்கலாகாது. எவ்விடங்களில் ச்ருதிஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாததான ஆசாரத்திற்கு மூலபூதமான ச்ருதிஸ்மிருதிகள் காணப்படவில்லையோ அவ்விடங்களில் மூலபூதமான ச்ருதியை கல்பிக்கிறோம்.

समाप्तिकामो मङ्गलमाचरेत, इत्यादिवत ।

மங்களமானது ஒவ்வொரு கிரந்தாரம்பங்களிலும், சிஷ்டர்களால் அநுஷ்டித்திருக்கிற படியாலும், அதற்கு மூலபூதமான ச்ருதியானது ஸ்பஷ்டமாகக் காணப்படாததால் அவ்விடமெப்படி கல்பிக்கிறோமோ. அவ்விதமே, விவாகத்தில் மாங்கல்ய தாரணத்திற்கும் விவாகமாகாத கன்னிகைகளுக்குத் தேசாசாரங்களுக்குத் தகுந்தபடி ஆசரணங்கள்

प्रख्यातवृत्तचतुष्पादादिपूजाहोदका ।

முதலியவைகள் இருந்து வருகின்றன. அவ்விதங்களிலும், 'தற்குத் தகுந்தபடி ச்ருதிகள் கற்பிக்கப்படல் வேண்டும். அவ்விதமே ஸ்காந்த புராணத்தில்.

न यत्र साक्षाद्विधयो न निषेधाःश्रुतौ स्मृतौ ।

देशाचारकुलाचारैस्तत्र धर्मो निरूप्यते ॥

ஆசாரத்திற்கு எவ்விடங்களில் ப்ரத்தியக்ஷத்தில்ச்ருதிகள் காணப்படவில்லையோ, அதற்கு ச்ருதிஸ்மிருதிகளில் நிஷேதமில்லாம

லிருந்தால் அவ்விடம் தேசாசாரங்களினால் ஆசாரத்திற்கு தர்ம நிருபணம் செய்யப்படுகிறது என்றார்.

உலகில் ஆசாரங்கள் தேசபேதமாகவும் புருஷபேதமாகவும் காணப்படுகிற படியாலும் ஆசாரமென்பதற்கு 'இன்னதுதான் பொருள்'என்று நிச்சயிக்க முடியாமல் இருக்கிறபடியாலும் ச்ருதிஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாததான எல்லா ஆசாரங்களும் தர்மமூலமாகவே ஆய்விட்டபடியால் அவற்றை பிரமாணமாகப் பெரியோர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆஸ்திகசிரோமணிகளொருவரும் தம்மதத்திற்கு விரோதமாகவும், குலதர்மங்களுக்கு விபரீதமாகவும் நடக்கமாட்டார்களென்பது திண்ணம், இவ்விதமே. பிதிரு முதலிய பெரியோர்களுடைய ஆசாரங்களையும் தர்மமூலமாகவே கிரஹிக்க வேண்டும்:—

येनास्य पितरो याता येन याताः पितामहाः ।
तेन यायात्सतां मार्गं तेन गच्छन्नरिष्यते ॥ मनुः 4-178.

ஒருமனிதனானவன். அனேக சாஸ்திரங்களையும், அதன் பொருள்களையும் நன்கு அறிந்திருந்த போதிலும் தன்பிதா பிதாமஹர் எவ்விதம் அநுஷ்டானம்செய்திருக்கிறார்களோ அவ்விதமே அவனும் அநுஷ்டிக்க வேண்டும். அப்படி அநுஷ்டிப்பனேயாகில் அவன் தர்மத்திலிருந்து விடுபட்டவனாக ஆகமாட்டானென்றார். ஆகையால் அவரவர்கள் வர்ணத்திற்குத்தகுந்தபடி எந்தெந்த காலங்களில் என்னென்ன கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டுமோ அந்தந்தகாலங்களில் அதை அநுஷ்டிக்க வேண்டியதவச்யமாகும். அவ்விதமே பிராமணர்கள் உபநயனமென்ற ஸம்ஸ்காரத்திற்குப் பிறகு குருகுலமடைந்து வித்யாப்யாஸங்கள் செய்து கொண்டுவேதோக்தமான கர்மாநுஷ்டானம் செய்ய வேண்டியதென்று கூறியிருக்கிறது. (சிலர்) உபநயன மென்ற ஸம்ஸ்காரத்திற்கு முன்னமே அக்குழந்தைகளை இரக்ஷிப்பதற்காக சௌளசாதி கார்யங்கள் செய்யவேண்டும். அக்குழந்தைக்கு அதன் தந்தையாவது, குருவாவது சௌளசாதிகளைச் செய்து வைக்கவேண்டு மென்று கீழ்கண்ட சுலோகங்களால் அபிப்ராயப்படுகிறார்கள். அதாவது.

असमर्थस्य बालस्य पिता वा यदि वा गुरुः ।
यमुद्दिश्य चरेद्धर्मं पापं तस्य न विद्यते ।
बालस्य पंचमाद्वर्षाद्रक्षार्थं शौचमाचरेत् ॥

என்றபத்யங்களால் குழந்தைகளுக்குக்கூட சௌசாதிகார்யங்கள் செய்ய வேண்டுமென்பது நன்கு தெரியவருகிறது. உபநயனத்திற்கு முந்தியும் அதற்குப் பிறகும் சௌசாதிகார்யங்கள் செய்ய வேண்டியதென்றால் க்ருஹஸ்தர்கள் முதலியவர்கள் அவச்யமனுஷ்டிக்க வேண்டுமென்று தெரிகிறது. அதையே பிரும்மபுராணம் (222) வது அத்தியாயத்தில் ஆசாரமவச்யமென்றுபலவாறு கூறி ஆசாரவிஹீனனுக்குத் தோஷங்கள் பலவாறு கூறி இருக்கிறது.

गृहस्थेन सदा कार्यं आचारपरिरक्षणम् ।
न ह्याचारविहीनस्य भद्रमत्र परत्र वा ॥

க்ருஹஸ்தாச்ரமங்களை அடைந்தவர்கள் ஆசாரங்களை முறையே அனுஷ்டிக்க வேண்டும். அப்படி ஆசாரத்திலிருந்து விடுபட்டவனாக ஆனால் இஹலோகத்திலும், பரலோகத்திலும் சுகமென்பது கிடையாதென்பதைத் தெரிவித்து, ஸதாசாரபரனாக இருப்பானேயாகில் அவனுக்கு ஸர்வஸம்பத்தும் கிட்டுகிறதென்பதை தெரிவித்துள்ளார்.

लक्षणैः परिहीनोऽपि सम्यगाचारतत्परः ।
श्रद्धावाननसूयश्च नरो जीवेत्समाश्शतम् ॥

ஓர் மனிதனானவன் இலக்ஷணங்களினின்றும் குறைந்தவனானபோதிலும் ஆசாரபரனாக இருப்பானேயாகில் ஸமஸ்த ஸம்பன்னனாயும், அசூயையில்லாதவனாயும் அனேக காலங்கள் ஜீவிப்பானென்று இந்த ஸ்மிருதி கூறுகிறது.

முன்னொரு காலத்தில் ஸுகேசி என்னும் இராக்ஷஸனைக் குறித்து அவனிடம் களிகூர்ந்து மகரிஷிகள் தர்மோபதேசம் செய்யுங்கால் ஆசாரமே முக்ய தர்மமென்றும் ஸதாசாரத்தை விருக்ஷரூபமென்றும் கூறியிருப்பதாக இந்த வாமனபுராணம் கூறுகிறது.

धर्मोऽस्य मूलं धनमस्य शाखा पुष्पं च कामः फलमस्य मोक्षः ।
असौ सदाचारतरुस्सुकेशिन् संसेवितो येन स पुण्यभोक्ता ॥

"ஹே ஸுகேசி! ஸதாசாரமென ஓர் விருக்ஷம், அதற்கு வேர் தர்
மமென்ற புருஷார்த்தம். அவ்விருக்ஷத்திற்குக்கிளை அர்த்தம்என்ற
புருஷார்த்தம். அவ்விருக்ஷத்திற்குப் புஷ்பம் காமமென்ற புரு
ஷார்த்தம். அவ்விருக்ஷத்திற்கு பலம் மோக்ஷமென்ற புருஷார்த்
தம். அது எல்லோருக்கும் கிடைப்பதென்பது மிகவுமரிது.
புண்யபுருஷர்களுக்குத்தான் கிடைக்கும். ஆகையால் நீஇன்று
முதல் ஆசாரமென்ற விருக்ஷத்தை நாள் தவறாமல் ஸேவித்து
மோக்ஷமான பலத்தை யடைவாயாக" என்று அநுக்கிரஹித்த
தாகக்கூறியிருக்கிறது. ஆகையால் நாமும் ஆசாரமென்ற விரு
க்ஷத்தைதரிசித்தால் அதாவது நமக்கேர்ப்பட்டிருக்கும் கர்மாக்
களை கைவிடாதனுஷ்டித்தால் மோக்ஷமென்ற பரமபுருஷார்த்
தத்தை நாமுமடையலா மென்பதற்கு ஐயமில்லை. நாம் நமக்கேற்
பட்டிருக்கும் ஜன்மஸாபல்யமடையவழி தேடவேண்டியதவச்ய
மாகும். அதற்கு முக்கிய காரணம் நான்கு புருஷார்த்தங்களை அவ
லம்பிக்க வேண்டும். அவைகளுள் எந்த புருஷார்த்தத்தை அவ
லிம்பிக்க வேண்டுமென்றால். முதலில் சொல்லிய தர்மம், அர்த்
தம், காமம். என்கிற மூன்று புருஷார்த்தங்கள் மோக்ஷத்திற்கு
ஸாதனங்களேயன்றி தாமே மோக்ஷத்தையளிக்கக் கூடியவைக
ளல்ல. ஆகையால் அவைகளைப் பரமபுருஷார்த்தங்களென்று கூற
முடியாது. மோக்ஷமென்றதே பரமபுருஷார்த்தமாகும். ஆகையால்
அவரவர்கள் வர்ணாச்ரமத்திற்குத் தகுந்தபடி விஹிதமான கர்மா
னுஷ்டானங்களை அனுஷ்டானம்செய்து மோக்ஷமடைய வேண்டு
மென்பது இதன் கருத்தாகும். மானிடர் ஜென்மத்திலும் உயர்ந்
ததான ப்ராம்மண்யத்தை அடைந்தும்! அதிலிருந்து முக்தியை
அடையவழி தேடாமலிருந்தால் வேறுஎந்த ஜன்மங்களிலும்
மோக்ஷமடைய முடியாதென்பது ஆஸ்திக ஜனங்கள் யாவருமறி
ந்த விஷயமேயாகும். ஆஸ்திகர்கள்யாவரும் அவரவர்கள் ஆஹ்நிக
ப்ரகாரம் ஸ்நான ஸந்தியாவந்தன அக்னிஹோத்திராதி கர்மாக்
களைச் செய்தும் இன்னும் விஹிதமான கர்மாக்களை அனுஷ்டித்
தும், ஈச்வராராதனங்களினாலும் ஸ்ரீ ஸர்வேச்வராயுமுள்ள பர

மேச்வரனுடைய ப்ரஸாதமடைந்து பரமானந்தமான மோக்ஷத்தையடைய விரும்ப வேண்டுமென்று கூறி இத்துடன் உபஸம்ஹாரம் செய்யலானேன்.

A. சிவராமசாஸ்திரி.
வித்யார்த்தி.

மீமாம்ஸ சிரோமணீ, ஸம்ஸ்கிருத காலேஜ், திருவாதி

பால்யவிவாகம்.

பிரும்மசாரி, கிருஹஸ்தன், வைகாநஸன், ஸன்யாஸி யென்று மனிதனுடைய வாழ்க்கை நான்காக வகுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் கிருஹஸ்தா ச்ரமம் என்ற இல்லறவாழ்க்கையே மற்றவைகளைக் காட்டிலும், சிறந்ததென்று யாவருமறிந்த விஷயம். ஆனது பற்றியே ஔவை பிராட்டியார்,

"இல்லறமல்லது நல்லற மன்று"

என்று கூறியுள்ளார். ஓர்மனிதனின் இல்லற வாழ்க்கையானது வித்தியாப்பியாஸம் முடிந்த பிறகு மணம்செய்து கொள்ளும் பொழுது ஆரம்பமாகும். விவாகம் என்பது ஸ்திரீ புருஷர்களின் வருங்கால வாழ்க்கைக்கு அடிப்படை போலிருப்பதால் யாவரும் நன்ருய் ஆராய்ந்தே மணம் செய்து கொள்ள வேண்டும். ஓர் விவாகம் நடக்கிறதாக வைத்துக்கொள்ளுவோம். அதில் வதூவரர்கள், அழகையும், தாயார்செல்வத்தையும், தந்தை கல்வியையும், உறவினர் நல்ல குலத்தையும் முக்கியமாகக் கருதுகின்றனர், நமது முன்னோர்கள் இவ்வழக்கத்தைக் கடைப்பிடித்தே தங்கள் குழந்தைகளுக்கு மணம் செய்து வைத்தார்கள். ஆனல் இக்காலத்தில் வதூவரர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்க, அதாவது தங்கள் கண்களுக்கு யார் அழகாகத் தோற்றுகிருர்களோ அவர்களையே பெரும்பாலும் மணம் செய்து கொள்ளுகிருர்கள். இதனல் வரும் கேடுகள் பல உள. அவற்றை விரித்துரைக்கின் வியாஸம் பெருகும். நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிச்சிறிது சொல்லுவோம்.

வித்தியாப்பியாஸம் முடிந்தபிறகு புருஷர்கள் தங்களைக் காட்டிலும், வயதிற் சிறியவர்களும், நற்குலத்திலுதித்தவர்களும், நல்லொழுக்க முடையவர்களுமான, பெண்களை மணம் செய்து கொள்ள வேண்டும். இந்துமதக் கொள்கைப்படி விவாகத்தின் நோக்கமாவது தர்மமான முறையில் ஸந்ததியை விருத்தி செய்வதும், இஹபர ஸுகங்களுக்குக் காரணமாகிய தர்மங்களை முறை தவறாமல் செய்வதுமே. இத்தகைய மேலான நோக்கங்கொண்ட விவாகம் சிறியவயதிலேயே செய்ய வேண்டு மென்று கௌதமர், மநு, போதாயனர், பைடீனஸி முதலிய முனிவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் இக்காலத்தில் மேநாட்டு நாகரீகத்தில் மூழ்கித் தங்களையும், தங்கள் தர்மங்களையுமே மூழ்கவிட்ட சிலர், பால்ய விவாகத்தினால் அநேக விதத்தீமை உண்டாகிறபடியால் வயதான பிறகே விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்றும் அவ்வாறே சாஸ்திரங்களும் முறையிடுகின்றன வென்றும் சொல்லுகிறார்கள். சாஸ்திரங்கள் முறையிடுகின்றன வென்று இவர்கள் சொல்லுவது ஆகாயத்தாமரை யென்பதுபோல் நம்பத்தகுந்ததல்ல வென்பதை மற்றொரு சமயம் எடுத்துக் காட்டுவோம். அவர்கள் பால்ய விவாகத்தினால் உண்டாகும் கெடுதல் கள் என எவற்றைக்கருதுகின்றனரோ, அவை பால்யவிவாகத்தினால்தான் உண்டாகின்றனவா, அல்லது வேறுகாரணங்களாலா வென்று தற்சமயம் விசாரித்து வியாஸத்தை முடிப்போம். பால்ய விவாகத்தால்,

1. வதூவரர்களுடைய தேகா ரோக்யம் கெடுதல்,
2. மாதர்களில் அநேகர்மலடியாகி விடுதல்,
3. ஸ்திரீசந்ததியே யதிகமாய் பிறத்தல்,
4. மாதர்கள் கல்விகற்க இயலாமற்போதல்,
5. பிற்காலத்தில் வதூவரர்கள் மனமொத்து வாழாமை,
6. விதவைகளதிகரித்தல்,
7. தேசத்தில் ஏழ்மைத்தன மதிகரித்தல்,
8. இந்தியாவின்மேல் அன்னிய தேசத்தினர் படையெடுத்தல்.

முதலிய பற்பல தீமைகள் உண்டாவதால், பால்யவிவாகத்தை யொழித்து பிரௌடாவிவாகம் (வயதான பிறகு விவாகம்) செய்து கொள்ள வேண்டுமென்று அநேகர் கருதுகின்றனர்

மேற்கூறிய தீமைகள் பால்யவிவாகத்தினுல் உண்டாகவில்லை யென்று கீழே எடுத்துக்காட்டுவோம்.

முதலாவதாக வதூவரர்களுடைய தேகாரோக்கியம் கெட்டுப் போவதாகச் சொல்லப்படுகிறது. நாம் கன்யாதானம் என்று விவாகத்தைக் கூறுகிறோம். அதன் பொருளாவது பெண்ணைக் கொடுப்பது, அதாவது பெண்ணைக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொள்வதுஎன்பது. இதைத்தான் ஆங்கிலத்தில் Betrothel என்று சொல்வது வழக்கம். மேநாட்டினர் ஒப்பந்தம்செய்து கொண்டபிறகு, அதன்படி சிற்சில காரணங்களால் நடக்காமலிருக்கிறார்கள், ஆனுல்நம்தேயத்தில்அம்மாதிரியல்ல. ஸத்தியத்திற்கு பிறப்பிடமல்லவா ஆர்யாவர்த்தம். வதூவரர்களுடையபரஸ்பரசரீர ஸம்பந்தமானது கர்ப்பாதானம் என்று சொல்லப்படுகிறது. கர்ப்பாதானம் வயதானபிறகே செய்யப்படுவதால்வதூவரர்களுடைய சரீர ஆரோக்கியம் பால்ய விவாகத்தினுல் குறைவடையுமென்று சொல்வது பொருந்தாது. தவிற, நம் நாட்டினரில் அநேகர் மேநாட்டு நாகரீக நரகத்தில் மூழ்கி நம் சரீரத்திற் கொவ்வாத, டீ, காபி, கோகோ, விஸ்கி முதலியவற்றை நாள் தவறினும் தவருமல் அளவுமீறிக் குடித்தலே இந்தியமக்களின் அரோக்கியக் குறைவுக்குக் காரணம் இவ்விதக்குடிகள் இல்லாத காலத்தில் அதாவது நமது மூதாதையர் காலத்தில் எவ்வளவு சிறிய வயதில் விவாகமானவரும்கூட திடசரீரமுள்ளவர்களாக இருந்தார்களென்பதை நாம் நம்தந்தை பாட்டனுர் வாயிலாகக் கேட்டிருக்கிறோம். ஆகையால் பால்யவிவாஹத்திற்கும், சரீராரோக்யகுறைவுக்கும் சம்பந்தமே இல்லையெனக் கூறலாம்.

இரண்டாவதாக மாதர்கள் மலடியாக ஆவது பால்ய விவாஹத்தாலல்ல. ஒரு ஸ்திரீமலடியாக ஆவதற்குக் கருப்பை விபரீதமாக இருத்தல், அதில் சதைவளர்தல், கிருமிகளிருத்தல் முதலியவைதான் காரணமென்று ஆயுர்வேத நிபுணர்களான, சரகர், முதலியவர்கள் கூறியுள்ளார்கள். கருப்பை சரியாக அமைக்கப்பட்டிருக்கும் ஒருமாது பால்யத்திலேயே விவாகம் செய்து கொண்டாலும் மலடியாக இருக்கமாட்டாள். கருப்பை விபரீதமாக அமைக்கப் பெற்றவள் வயதானபிறகு மணஞ்செய்து

கொண்டாலும் பிள்ளைபெரும் பாக்கியத்தை யடையமுடியாது. ஆகையால், பால்யவிவாகத்தினுல் மலடிகளாகவும், பிரௌடா விவாகத்தினுல் மலடிகளல்லாமலும் ஆகிவிடுகிருர்களென்று சொல்வது முற்றிலும் சரியல்ல.

மூன்ருவதாக பால்யவிவாகத்தால் ஸ்திரீ ஸந்ததியே அதிகரிப்பதாகக்கூறுவது முன்னுக்குப்பின் முறண்படுகிறது. பால்யவிவாகத்தினுல் மலடிகள் அதிகமாகிருர்கள் என்ருல் ஸந்ததியெப்படிப் பெருகுமோ தெரியவில்லை. தவிற ஸ்திரீஸந்ததி அதிகரிப்பதாக வைத்துக் கொண்டாலும், சமீபத்தில் கணக்கிடப்பட்ட ஜனஸங்கியையில் புருஷர்களின் சங்கியை மாதர்ஸங்கியைவிடக் குறைவாக இருக்கவேண்டும். அப்படியில்லாததால் பால்யவிவாகத்தால் ஸ்திரீகள் அதிகமாகிருர்களென்று சொல்வதுஅனுபவத்திற்குமாருக யிருக்கிறது. பிரான்ஸ் முதலிய தேசங்களில் ஸ்திரீகள் அதிகமாக விருப்பதற்கு இவர்கள் என்ன காரணம் இயம்புவார்களோ தெரியவில்லை!

நான்காவதாக மாதர்கள் கல்விகற்பதற்கு பால்யவிவாக மிடையூருகு மென்று சொல்வதும் சரியன்று. மேநாட்டு மாதர்கள் ஆடவர்கள்போல் உத்தியோகம் வகிக்க வேண்டு மென்று அவர கொள்வதுபோல நம்நாட்டு மாதர்கள் அவா கொள்வது கிடையாது. நமது மாதர்களுக்கு அவசியமாகக் கற்கவேண்டிய கல்விகளை வீட்டிலேயே பெற்ருேர்கள் கற்றுக் கொடுத்து விடலாம். இதைப்பற்றிப் பெண்கல்வியென்ற மகுடமிட்டு ஓர் வியாசம் வரையப் போவதால் அங்கு எனது அபிப்பிராயத்தை விரிவாக உரைக்கத்துணிந்து இங்கு இத்துடன் இதை நிறுத்துவோம்.

(தொடரும்)

சிரோமணி, T. V. ஸ்ரீகண்டசாஸ்திரி.
Proficient